Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 12/2025** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **தங்கராஜ்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**04.08.2026**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

1. நான் தற்போது அருப்புக்கோட்டை ஆத்திபட்டியில் குடியிருந்து மில்லில் வேலை செய்து வருகிறேன். அசா.1 புன்னைவனம் எனது சித்தப்பா ஆவார். வழக்கு விபத்தில் இறந்துபோன முத்துபண்ணை எனது அண்ணன் ஆவார். கடந்த 05.05.2024ம் தேதி நான் விவசாய வேலை செய்து கொண்டிருந்தபோது, தெரியாத ஒரு நம்பரிலிருந்து எனக்கு போன் வந்தது. அப்போது எனது அண்ணன் முத்துபண்ணைக்கு ராமலிங்கா மில் அருகே மதியம் 03.00 மணியளவில் விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிவித்தார்கள். விபத்து நடந்தபோது நான் நேரடியாக பார்க்கவில்லை. தகவல் தெரிந்து நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்குள் எனது அண்ணனை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று விட்டார்கள். மருத்துவமனைக்கு சென்றுதான் எனது அண்ணனை நான் பார்த்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அவர்களிடமும் நான் மேற்படி விவரத்தைதான் கூறினேன்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

1. கடந்த 05.05.2024 ம் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் நான் சொந்த வேலையாக திருச்சுழிக்கு சென்று கொண்டிருந்தபோது ராமலிங்கா மில் ஆலிவ் பெட்ரோல் பல்க் அருகே முத்துபண்ணையும், தினேஷ்குமாரும் TN 67 BW 9160 என்ற பதிவெண் கொண்ட XL 100 இருசக்கர வாகனத்தில் ஆத்திபட்டி பக்கம் இருந்து இராமலிங்கா மில்லை நோக்கி பெட்ரோல் பல்க் முன்பு சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி ராமலிங்கா மில் பக்கம் இருந்து ஆத்திபட்டி நோக்கி பால் வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், எந்தவிதமான சைகையும் காட்டாமல் பெட்ரோல் போடுவதற்காக திடீரென வலது புறமாக திரும்பி முத்துபண்ணை சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் முத்துபண்ணையும், பின்னால் உட்கார்ந்த தினேஷ்குமாரும் கீழே விழுந்துவிட்ட சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், பின்னர் நான் வேலைக்கு சென்றுவிட்டதாகவும், 108 ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்டவர்களை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், விபத்து சம்மந்தமாக முத்துப்பண்ணை மனைவி புகார் கொடுத்ததாகவும், காயம்பட்ட முத்துபண்ணை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது 23.05.2024 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டதாக கேள்விபட்டதாகவும் போலீசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 12/2025** |
| Deposition of witness for | :: | **PW.4** |
| Name | :: | **விஜய்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**04.08.2026**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

1. நான் ஆத்திப்பட்டியில் குடியிருந்துகொண்டு காந்திநகரிலுள்ள பெட்ரோல் பல்க்கில் வேலை செய்கிறேன். அ.சா.1 புன்னைவணம் எனது பெரியப்பா ஆவார். வழக்கு விபத்தில் இறந்துபோன முத்துப்பண்ணை எனது அண்ணன் ஆவார். கடந்த 05.05.2024ம் தேதி நான் வேலையிருந்தபோது, எனது அண்ணன் முத்துப்பண்ணையின் செல்போனிலிருந்து எனக்கு மதியம் 03.30 மணியளவில் யாரோ ஒருவர் பேசினார், அப்போது அவர் எனது அண்ணனுக்கு ராமலிங்கா மில் அருகே உள்ள பெட்ரோல் பல்க் எதிரே விபத்து ஏற்பட்டுள்ளதாக என்னிடம் கூறினார். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்கு செல்வதற்குள் எனது அண்ணனை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். மருத்துவமனையில் வைத்துதான் எனது அண்ணனை பார்த்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள், அவர்களிடமும் நான் விபத்தை பார்க்கவில்லை என்றுதான் கூறினேன்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என**

**அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

1. கடந்த 05.05.2024ம் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் நான் சொந்த வேலையாக திருச்சுழிக்கு சென்று கொண்டிருந்தபோது ராமலிங்கா மில் ஆலிவ் பெட்ரோல் பல்க் அருகே முத்துபண்ணையும், தினேஷ்குமாரும் TN 67 BW 9160 என்ற பதிவெண் கொண்ட XL 100 இருசக்கர வாகனத்தில் ஆத்திபட்டி பக்கம் இருந்து இராமலிங்கா மில்லை நோக்கி பெட்ரோல் பல்க் முன்பு சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி ராமலிங்கா மில் பக்கம் இருந்து ஆத்திபட்டி நோக்கி பால் வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், எந்தவிதமான சைகையும் காட்டாமல் பெட்ரோல் போடுவதற்காக திடீரென வலது புறமாக திரும்பி முத்துபண்ணை சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் முத்துபண்ணையும், பின்னால் உட்கார்ந்த தினேஷ்குமாரும் கீழே விழுந்துவிட்ட சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்டவர்களை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், விபத்து சம்மந்தமாக முத்துப்பண்ணை மனைவி புகார் கொடுத்ததாகவும், காயம்பட்ட முத்துபண்ணை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது 23.05.2024ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டதாகவும் போலீசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**